**மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலரே கடவுச் சீட்டு பெற மறுப்பின்மை சான்றிதழ் வழங்கலாம் –தொடக்கக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்**

நகஎண் 7805/டி3/2014 நாள் 17–03–2014

பொருள் தொடக்கக்கல்வி – தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள நடத்தை விதிகள் 1973 வெளிநாடு செல்ல கடவுச் சீட்டு பெற அல்லது புதுப்பிக்க மறுப்பின்மைச் சான்று வழங்குதல் – விதி 24 அ – க்கு திருத்தம் வெளியிடப்பட்ட அரசாணை நகல் அனுப்புதல் சார்ந்து

**பார்வை** 1 அரசாணை ( நிலை) எண் 109 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (A) துறை நாள் 31–07–2006

2 அரசாணை ( நிலை) எண் 140 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (– A) துறை நாள் 07–09–2006

3 அரசாணை ( நிலை) எண் 259பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (– A) துறை நாள் 17–12–2007

4 அரசாணை ( நிலை) எண் 140 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (A) துறை நாள் 21–11–2013

பார்வை 4 இல் காணும் அரசாணை நகல், தக்க நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

பி,சி,மற்றும் டி பிரிவு அரசுப் பணியாளர்கள் வெளிநாடு செல்வதற்கு கடவுச் சீட்டு ( Passport) வெற அல்லது புதுப்பிக்க (Renewall) மற்றும் வெளிநாடு செல்வதற்கும் அதற்குரிய விடுப்பு அனுமதிப்பதற்கும் துறைத் தலைவர்களுக்கு பார்வை 1 இல் காணும் அரசாணையில் அதிகாரம் வழங்கப்பட்டது. அதற்கான விதித் திருத்தம் பார்வை 2 இல் காணும் அரசாணையில் வெளியிடப்பட்டது. மீளவும் அடையாளச் சான்றிதழ் மற்றும் மறுப்பின்மைச் சான்று வழங்குதல் குறித்து பார்வை 3 இல் காணும் அரசாணையில் விதித்திருத்தம் வெளியிடப்பட்டது.

தற்போது பி,சி மற்றும் டி பிரிவு அரசுப் பணியாளர்கள வெளிநாடு செல்வதறகு கடவுச் சீட்டு ( Passport) பெற அல்லது (Renewall) மறுப்பின்மைச் சான்று வழங்கும் அதிகாரம் சார்ந்த நியமன அலுவர்களுக்கு மாற்றம் செய்து விதித்திருத்தம் செய்யப்பட்டு பார்வை 4 இல் காணும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்குறித்தவாறு நியமன அதிகாரிகளுக்கு பார்வை 4 இல் காணும் அரசாணையில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில் பி,சி மற்றும் டி பிரிவு அரசுப் பணியாளர்கள் வெளிநாடு செல்வதற்கு கடவுச் சீட்டு ( Passport) பெற அல்லது (Renewall) மறுப்பின்மைச் சான்று வழங்கும் அதிகாரம் சார்ந்து பார்வை 1 இல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைகளைத் தவறாமல் பின்பற்றி தங்கள் ஆளுகைக்கு உட்பட்ட பள்ளி ஆசிரியர்களின் கருத்துருக்கள் மீது ஒரு வாரத்திற்குற் கடவுச் சீட்டு பெற அல்லது புதுப்பிக்க மறுப்பின்மைச் சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## நிபந்தனைகள்

1. தமிழ்நாடு குடிமுறைப்பணி (ஒழுங்குமுறையும் மேல்முறையீடும்) விதிகளில் விதி 17(பி) ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருத்தல் கூடாது

2. விழிப்புப்பணி மற்றும் ஊழல் தடுப்புத் துறை வழக்கு ஏதும் நிலுவையில் இருத்தல் கூடாது

3. மனுதாரர் மீது யாதொரு எதிர்மறை குறிப்புக்ளும் காவல் அலுவலகக் குறிப்பேடுகளில் உள்ளனவா என்பது சார்ந்தும், பாதுகாப்புக் கண்ணோட்டத்தில் அன்னார் கடவுச் சீட்டு பெறுவதற்கும் மற்றும் வெளிநாடு செல்வதற்கும் பாதுகாப்பு பிரிவு காவல் துறை கண்காணிபிபாளரிடமிருந்து உரிய சான்று பெறப்பட வேண்டும் ( Report should be obtained from SBCID)

4. மறுப்பின்மைச் சான்று வழங்கும் முடிவினை நியமன அலுவலரே தன்னிச்சையாக எடுக்கலாம். மறுப்பின்மை சான்றில் அன்னார் மட்டுமே கையொப்பம் இட வேண்டும். அதே நேரத்தில் பி,சி மற்றும் டி பிரிவு அரசுப் பணியாளர்கள வெளிநாடு செல்வதறகும் அதற்குரிய விடுப்பு அனுமதிப்பதற்கும் பார்வை 1இல் காம் அரசாணையின் படி துறைத்தலைவருக்கு வழக்கம்போல் சார்ந்த கருத்துருவினை அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தொடக்கக்கல்வி இயக்குநர்